இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 70 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 03 – செவ்வாய்க்கிழமை 20 அக்டோபர் 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 70 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 03 - Tuesday 20 October 2026 - Dak 8 Pages ₹ 5.00

தொடரும் கொலைகள்! போதை உற்பத்தி மையமாகும் தமிழ்நாடு! தள்ளாடும் காவல்துறை!

முதல்வர் Rest எடுப்பதை விடுத்து நடவடிக்கை எடுப்பாரா?

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் காட்டமான அறிக்கை!

சென்னை, அக். 20 -

“முதல்வர் Rest எடுப்பதை விடுத்து தொடரும் கொலைகள், போதைப் பொருள் கடத்தலைத் தடுக்க நடவடிக்கை எடுப் பாரா?” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் காட்டமாக விமர்சித்துள்ளார்.

நாகப்பட்டினத்தில் 135 கோடி ரூபாய் மதிப்பில் தவெக நிர்வாகியிடம் சர்வதேச போதை பொருளான மெத்தபெட்டமைன் பிடிபட்ட வழக்கில் பல திடுக்கிடும் தகவல் கள் தெரியவந்துள்ளது.

கைதான த.வெ.க. முன்னாள் நிர்வாகி பூபாலன் தரப்பினர், உயரதிகாரி ஒருவரு டன் தொடர்பில் இருந்தாக தெரிகிறது.



அந்த நபர், பூபாலன் தரப்பினரிடம் ‘ஐ போனில் உள்ள “பேஸ் டைம் ஆடியோவில்” அவ்வப்போது பேசி வந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் பூபாலனுக்கு உதவிய அதிகா ரிகளும் அதிர்ச்சியில் உள்ளனர். எனவே இந்திய அளவில் பல முக்கிய புள்ளிகள் சிக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், பெருந்துறை அருகே காணாமல் போன நர்ஸ், பெருந்துறை அருகே நிர்வாண நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். அவரை கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம் செய்து கொன்று நகை கொள்ளையடிக்கப்பட்டது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார் கள்.

கடந்த 14ம் தேதி வேலைக்கு சென்ற நர்ஸ், மருத்துவமனையில் இருந்து அன்று இரவு 7 மணிக்கு மேல் பணி முடிந்து வீட்டுக்கு திரும்பியதாகவும், வழி யில் பழக்கடை ஒன்றுக்கு சென்றதாகவும் அதன்பிறகே காணாமல் போனதாகவும் கூறப்படுகிறது.

முதற்கட்ட விசாரணையில், நர்ஸ் கடத்தப்பட்டு பாலியல் பலாத்கா ரம் செய்து கொலை செய்யப்பட்டுள் ளது தெரியவந்துள்ளது.

போதைப் பொருள் கடத்தல் கொடிகட்டிப் பறக்கிறது!

இந்நிலையில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சில நாட்களுக்கு முன்பு தான், திண்டுக்கல் மாவட் டத்தில் காவல் நிலையத்தில் ஜாமின் கையெழுத்து போட்டுவிட்டு வந்தவர் மனைவி முன்பே கொடூர மாகக் கொலை செய்யப்பட்டார். அப்போதே, “ஜாமினில் வெளி வரும் குற்றவாளிகள் கண்காணிக்கப்படுகிறார்களா இல்லையா?” என நான் கேள்வி எழுப்பி யிருந்தேன். அப்படி உருப்படியான எதுவும் செய்யப்படுவதில்லை எனச் சிவகங்கையில் நேற்று நடந்துள்ள



மற்றுமொரு கொலைச் சம்பவம் காட்டி யுள்ளது.

கொலை வழக்கில் கைதாகி, ஜாமினில் வெளிவந்த மதன் எனும் ரவுடி ஓட ஓட விரட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். முழுக்க முழுக்க காவல்துறையின் அலட் சியத்தால் நடந்துள்ள கொலை இது.

> **கா**வல்துறையில் அவர் உரிய கவனம் செலுத்துவதில்லை என்பதைத்தான் நிற்காமல் தொடரும் அரிவாள் வெட்டுகளும், ஒன்றிய அரசின் விசாரணை அமைப்பு களிடம் பிடிபடும் போதைக் கடத்தல்களும் காண்பிக்கின்றன. CM sir, your negligence is costing lives. Drugs-ஐ விடு, Sports-ஐ எடு என்று சொன்ன நீங்கள் முதலில் Rest-ஐ விட்டுவிட்டு, உங்கள் துறையைக் கையில் எடுங்கள்.

பெருந்துறை அருகே செவிலியர் கடத்தப்பட்டு, பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள் ளார். 5 நாட்களுக்குப் பின்புதான் அவரது சடலத்தையே கண்டறிந்திருக்கிறார்கள். நடப்பது நம் ஆட்சிதானே என நினைத்து த.வெ.க. நிர் வாகிகளின் போதைப் பொருள் கடத்தலும் கொடி கட்டிப் பறக்கிறது.

வேதாரண்யத்தில் த.வெ.க. ஒன்றியச் செயலா ளர் கஞ்சா கடத்திய வழக்கில் கைது செய்யப்பட்டார். இப் போது, அதே மாவட்டத்தில் உலகத்துக்கே மெத் தயா ரித்து விற்பனை செய்யும் மையமாகத் தமிழ்நாட்டை மாற்ற முயன்ற த.வெ.க. நிர்வாகி ‘மெத்’ பூபாலனும் கைதாகியுள்ளார்.

முதலமைச்சரின் திரைப்படங்களைப் பார்த்து இதைத் தான் அவரது கட்சிக்காரர்கள் கற்றுக் கொள்கிறார்களா? மாநிலக் காவல் துறையினரால் இவர்களைப் பிடிக்க முடியவில்லையா அல்லது ஆளும் கட்சி நபர் என்பதால் இத்தனை நாள் கண்டும் காணாமல் விட்டனரா?

முதலமைச்சர் தன் கட்சியினரை Control-இல் வைக்க வேண்டும்!

Drug control செய்ய வேண்டு மென்றால், முதலில் தன் கட்சியி னரை முதலமைச்சர் control-இல் வைக்க வேண்டும். அதற்கு, காவல் துறை முதலில் அவரது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். ஆனால் நடப்பது என்ன?

காவல்துறையை முதல்வர் OutSource செய்துவிட்டாரா?

துறைக்குப் பெயரளவில் மட்டுமே முத லமைச்சர் பொறுப்பு வகிக்கிறார். தன்னிட முள்ள பல துறைகளின் பொறுப்புகளை



மற்ற அமைச்சர்களுக்குப் பிரித்துக் கொடுத் ததைப் போல, காவல்துறையையும் outsource செய்துவிட்டாரா?

காவல்துறையில் அவர் உரிய கவனம் செலுத்துவதில்லை என்பதைத்தான் நிற் காமல் தொடரும் அரிவாள் வெட்டுகளும், ஒன்றிய அரசின் விசாரணை அமைப்பு களிடம் பிடிபடும் போதைக் கடத்தல்களும் காண்பிக்கின்றன. CM sir, your negligence is costing lives. Drugsஐ விடு, Sportsஐ எடு என்று சொன்ன நீங்கள் முதலில் Restஐ விட்டுவிட்டு, உங்கள் துறையைக் கையில் எடுங்கள்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கை யில் கூறியுள்ளார்.

‘டம்மி’ முதல்வர் ஆட்சியில் சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

24 மணி நேரத்தில் 11 படுகொலைகள்!

அச்சத்தில் உறைந்துள்ள மக்கள்!

சென்னை, அக். 20 -

த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்து, கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட குற்றச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதி கரித்து வரும் நிலையில், தமிழ் நாட்டில் 24 மணிநேரத்தில் 11 படுகொலை சம்பவங்கள் அரங் கேறி மக்களை அதிர்ச்சிக்குள் ளாக்கியுள்ளது.

ஈரோடு மாவட்டம் பெருந் துறை அருகே செவிலியர் கடத் தப்பட்டு பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்யப்பட்டு, 5 நாட்களுக்குப் பிறகு அழுகிய நிலையில், நிர்வாண கோலத்தில் சடலமாக மீட்கப்பட்டது. தென் காசி மாவட்டம், கடையம் அருகே ராமசந்திரபுரத்தில் 12 பவுன் நகைக்காக ஜானகி எனும் 82 வயது மூதாட்டி கொடூரக் கொலை செய்யப்பட்டார்.

இதேபோல், தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் அருகே உத் தாணி கிராமத்தில் வீட்டில் தனி யாக வசித்து வந்த கலைச்செல்வி எனும் 63 வயது மூதாட்டி ரத்த காயங்களுடன் சடலமாக மீட்கப் பட்டார். மூதாட்டி அணிந்திருந்த தங்க வளையல் மற்றும் தங்க சங்கிலிகள் திருடுபோயுள்ளன. நகைக்காக மூதாட்டி கொலை செய்யப்பட்டாரா என போலீஸார் விசாரணை மேற்கொண்டு வரு கின்றனர்..

மஞ்சுவிரட்டு போட்டியில் ஓட ஓட வெட்டிக்கொலை!

கிருஷ்ணகிரி மாவட்டம் அக் கொண்டப்பள்ளி கிராமத்தில் ருக் மணி என்பவர் கழுத்தை அறுத்து படுகொலை செய்யப்பட் டார். சிவகங்கை மாவட்டம் மேல மங்கலத்தில் மஞ்சுவிரட்டு போட் டியின்போது மதன் என்பவர் ஓட ஓட வெட்டிக்கொலை செய்யப்பட் டார்.. கோவை மாவட்டம் சரவ ணம்பட்டியில் குடிபோதையில் சுரேஷ் என்பவர் படுகொலை செய்யப்பட்டார்.

விருதுநகர் மாவட்டம் ராஜபா ளையத்தில் மாட்டுத் தொழுவம் அமைப்பதில் ஏற்பட்ட தகராறில் பொன்னுக்காளை எனும் இளை ஞர் தலையில் அம்மிக்கல்லை போட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற் படுத்தியது. திண்டுக்கல் மாவட் டம் வேடசந்தூர் அருகே தமுத் துப்பட்டியில் தெய்வானை எனும் மூதாட்டி மண்வெட்டியால் வெட் டியும், கழுத்தை நெரித்தும் கொலை செய்யப்பட்டார்.

கல்லூரி மாணவர் அடித்துக் கொலை!

கடலூர் மாவட்டம் பண்டரக் கோட்டை வாணியம்பாளையத் தில் குணால் எனும் கல்லூரி மாணவர் கம்பால் அடித்துக் கொலை செய்யப்பட்டார். த.வெ.க. ஆட்சியில் கஞ்சா பழக் கம் அதிகரித்துள்ள நிலையில், போதையால் சீரழிந்த கல்லூரி மாணவர் குணாலை அவரது தந்தையே அடித்துக் கொலை செய்தார்..

ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி அடுத்த கீழ்வெண்பாக் கத்தில் மணிகண்டன் எனும் 27 வயது இளைஞர் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டார். கடலூர் மாவட்டம் பெரியவடவாடி கிரா மத்தில் நிலத்தகராறில் கதிர்வேல் எனும் விவசாயி, விறகு வெட்டும் கத்தியால் வெட்டி படுகொலை செய்யப்பட்டார்.

த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்து, கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட குற்றச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதி கரித்து வருவதால் மக்கள் அச்சத் தில் உறைந்துள்ளனர்.

தேர்தல் ஆணையர் நியமனச் சட்டம்:

ஆதரவளித்தது தவறு!

ஆந்திர முன்னாள் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி வேதனை!

விஜயவாடா, அக். 20 -

தேர்தல் ஆணையர் நிய மன சட்டத்தை நிறை வேற்ற ஆதரவளித்தது தவ றானது என்றும் அதற்கு இப்போது வருந்துவதாக ஆந்திர முன்னாள் முதல மைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையர் களை நியமிக்கும் தேர்வுக் குழுவில் உச்ச நீதிமன்ற நீதி பதிக்குப் பதிலாக ஒன்றிய அமைச்சரை நியமிக்கும் மசோதாவை ஒன்றிய அரசு கடந்த ஆண்டு 2023 ஆம் ஆண்டு நிறைவேற்றியது. இதற்கு ஒய்.எஸ்.ஆர். காங் கிரஸ் அப்போது ஆதரவு தெரிவித்தது. இந்த நிலை யில் அந்த மசோதாவுக்கு ஆதரவளித்தது தவறானது என்றும் அதற்கு தற்போது வருந்துவதாக தற்போது ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

அந்த சட்டத்தின் அடிப் படையில் தேர்தல் ஆணை யரை நியமிக்கும் தற்போ தைய நடைமுறை தேர்தல் ஆணையத்தின் கட்டமைப் பையே ஒருதலைப் பட்ச மாக மாற்றியுள்ளதாக அவர் குற்றம் சாட்டியுள் ளார். இந்த சட்டத்தை மீண்டும் திருத்தம் செய்து, தேர்வுக் குழுவில் உச்ச நீதி மன்ற தலைமை நீதிபதியை சேர்க்க வேண்டும் என்று ஜெகன்மோகன் ரெட்டி வலியுறுத்தி உள்ளார்.

2020 முதல் பா.ஜ.க.வுக்கு நாடாளுமன் றத்தில் ஆதரவளித்துவரும் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ், தேர்தல் ஆணையர் விவகா ரத்தில் ஒன்றிய அரசை கடு மையாக விமர்சித்துள்ளது குறிப்பிடத்தக்கது.